# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 186 | வெள்ளிக்கிழமை Friday | 02.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## “9/11 பாணி தாக்குதலை தடுத்துள்ளார் விமானி ஸ்மித் மச்சார்” பிரதமர் மோடி பெருமிதம்





புதுடெல்லி: அமெரிக்காவுக்கு எதிராக அல் காய்தா தீவிரவாத அமைப்பு நடத்திய 9/11 போன்ற ஒரு தாக்குதலை விமானி ஸ்மித் மச்சார் தடுத்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (யுபிஎஸ்சி) நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

அப்போது அவர், "துபாயில் இருந்து டெல் அவிவ் நோக்கிச் சென்று கொண்டிருந்த போயிங் பயணிகள் விமானத்தில் நேற்று நடந்த சம்பவம், அதில் இந்தியாவைச் சேர்ந்த கேப்டன் ஸ்மித் மச்சார் வெளிப்படுத்திய பொறுமை, விவேகம், துணிச்சல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

9/11 போன்ற ஒரு தாக்குதலில் இருந்து விமானி ஸ்மித் மச்சார், தங்களை காப்பாற்றியதாக இஸ்ரேல் பிரதமர் கூறி இருப்பது ஒவ்வொரு இந்தியரையும் பெருமை கொள்ள வைத்திருக்கிறது.

நான் அவரது தந்தை பூபேந்திர பாய், தாய் கீதா பெஹன், மனைவி சோனல் ஆகியோருடன் உரையாடினேன். இன்று உலகம் முழுவதும் அவரைப் பற்றி பெருமை கொள்கிறது.

யுபிஎஸ்சி-யின் 100 ஆண்டுகளைக் கொண்டாடும் நாள் மட்டுமல்ல, அதன் பாரம்பரியத்தைக் கொண்டாடும் நாளும்கூட. இது ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான இளைஞர்கள் கொண்டிருக்கும் லட்சியத்தைக் கொண்டாடும் நிகழ்வாகும்.

இந்த 100 ஆண்டுகாலப் பயணத்தில் தலைமுறைகள் மாறின, அரசுகள் மாறின, தொழில்நுட்பம் மாறியது, பாடத்திட்டங்கள் மாறின. ஆனால், யுபிஎஸ்சி மீதான நம்பிக்கை இன்றும் என்றும் மாறாமல் உறுதியாக உள்ளது.

இன்று, யுபிஎஸ்சி மூலம் தேர்வாகக் கூடியவர்கள் வளர்ந்த இந்தியா எனும் இலக்கை அடைவதில் பெரும் பங்காற்றுவார்கள். இதை கருத்தில் கொண்டு, தேசமே முதலில், குடிமக்களே முதலில் என்ற இரண்டு கொள்கைகளை நினைவில் கொள்ள வேண்டும்.

அரசுப் பதவியின் மீதான ஈர்ப்பால் அல்லாமல், மக்கள் சேவை மீதான ஆர்வத்தால் ஈர்க்கப்படும் இளைஞர்களை நாம் பொதுச் சேவைக்கு (Public Services) கொண்டு வர வேண்டும். எனவே, பணி நியமனத் தேர்வானது ஒரு தேர்வர் எவ்வளவு விஷயங்களை தெரிந்து வைத்துள்ளார் என்பதை மட்டும் சோதிப்பதாக இருக்கக்கூடாது. மாறாக, அந்த இளைஞர் ஏன் குடிமைப் பணிகளில் இணைய விரும்புகிறார் என்பதையும் அது ஆராய வேண்டும். அரசு மட்டுமே நம்மைப் பராமரிக்கும் பெற்றோர் என்று கருதப்பட்ட ஒரு காலத்தை நாம் கடந்த காலத்தில் பார்த்திருக்கிறோம். அரசே முழு அதிகாரம் கொண்ட அமைப்பு என்று கருதப்பட்ட காலம் அது.

ஆனால், குடிமக்களே தெய்வம் என்ற தாரக மந்திரத்தைக் கொண்ட ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். அதாவது குடிமகன் நமக்கு தெய்வத்துக்கு இணையானவர். குடிமக்களுக்குச் சேவையாற்றுவதே நமது முதன்மையான முன்னுரிமை.

ஏழைகளின் துயரத்தைப் புரிந்துகொள்ளும் இரக்கஉணர்வுகொண்ட, சிக்கல்களைத் தீர்ப்பதில் புதுமையான அணுகுமுறையைக் கையாளக்கூடிய, நாட்டின் தேவைகளை உணர்ந்த வல்லுநர்கள் நமக்குத் தேவை. சட்டங்கள் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், ஒரு குறிப்பிட்ட சட்டம் உண்மையில் நல்லதா என்பதையும் புரிந்து கொள்ளக்கூடிய வல்லுநர் தேவை" என தெரிவித்தார்.

## பெண்கள் வெற்றிப் பயண திட்டத்தில் அரசு பஸ்களில் எவ்வளவு தூரம் இலவசமாக பயணிக்கலாம்?



தமிழகத்தில் கடந்த தி.மு.க. ஆட்சியில் மகளிர்விடியல்பயண திட்டம் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் சாதாரண நகர அரசு பஸ்களில் பெண்கள் இலவசமாக பயணிக்கும் வசதி இருந்து வருகிறது. தற்போது, தமிழகத்தில் ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு,இந்ததிட்டத்தின் பெயரைவெற்றிப்பயணத் திட்டம் என்று மாற்றியதுடன்,சாதாரண நகர பஸ்களையும் தாண்டி, எக்ஸ்பிரஸ், எல்.எஸ்.எஸ்., டீலக்ஸ் அரசு பஸ்களிலும் பெண்கள் இலவசமாக பயணிக்கும் வகையில் விரிவாக்கம்செய்யப்பட்டுள்ளது.

(அக்.2) பெண்களுக்கான வெற்றிப் பயண திட்டத்தை முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் தொடங்கிவைக்க இருக்கிறார். சென்னை கோயம்பேடு பஸ் நிலையத்தில் இந்த திட்டத்தை அவர் தொடங்கிவைப்பார் என்று தெரிகிறது. வெற்றிப் பயணத்திட்டத்தின் மூலம் எக்ஸ்பிரஸ், எல்.எஸ்.எஸ்., டீலக்ஸ் அரசு பஸ்களில் பெண்கள் பயணிக்கலாம் என்றாலும், எவ்வளவு தூரம் செல்ல முடியும்?, சென்னையில் இருந்து ஒருவர் நாகர்கோவிலுக்கோ, அல்லது கோவைக்கோ செல்ல முடியுமா?, அவ்வாறு செல்ல வேண்டும் என்றால், எத்தனை பஸ்கள் மாற வேண்டும்? என்ற கேள்விகள் பெண்களையும் தாண்டி அனைவரது மனதிலும் எழுகிறது

பொதுவாக, தமிழகத்தில் அரசு எக்ஸ்பிரஸ் பஸ்கள் 30 முதல் 100 கி.மீ. வரையும், எல்.எஸ்.எஸ்.பஸ்கள் 30 முதல் 40 கி.மீ. வரையும், டீலக்ஸ் பஸ்கள் 30 முதல் 50 கி.மீ. வரையும் இயக்கப்பட்டு வருகிறது. இதைவைத்து பார்க்கும்போது அரசு எக்ஸ்பிரஸ் பஸ்கள்தான் நீண்ட தூரம் செல்கின்றன. அதை வைத்து கணக்கிடும்போது,சென்னையில் இருந்து பெண் ஒருவர் எக்ஸ்பிரஸ் பஸ்களில், செங்கல்பட்டு, திண்டிவ னம், விழுப்புரம், விருத்தாசலம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோவில்பட்டி, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரிஎனமாறி..மாறி.. இலவசமாக நீண்ட தூரம் செல்ல முடியும்.

84 லட்சம் பெண்கள் தினமும் பயனடைவார்கள் அதேபோல், திருச்சி-திண்டுக்கல், தஞ்சாவூர்- நாகப்பட்டினம், தஞ்சாவூர் - வேளாங்கண்ணி, திண்டிவனம்-விழுப்புரம், விருத்தாசலம் - திருச்சி, கோவை - பழனி, பழனி - திண்டுக்கல், கோவை - ஈரோடு, ஈரோடு - சேலம், மதுரை - விருதுநகர், விருதுநகர்-கோவில்பட்டி, திருநெல்வேலி - நாகர்கோவில் என அரசு எக்ஸ்பிரஸ் பஸ்களில் பெண்கள் இலவசமாக செல்ல முடியும். திருநங்கைகளும் இலவசமாக பயணிக்கலாம்.

வெற்றிப்பயணதிட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 12,692 அரசு பஸ்களில் (எக்ஸ்பிரஸ், எல்.எஸ்.எஸ்., டீலக்ஸ்) பெண்களும், திருநங்கைகளும் முற்றிலும் இலவசமாக பயணிக்க முடியும். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 84 லட்சம் பெண்கள் பயனடைவார்கள் என்றும், 16 லட்சத்திற்கும் மேற்பட்ட ஒரு வழிப் பயணங்கள் மேற்கொள்ள வழிவகுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வணிக பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர் விலை உயர்வு: சென்னையில் ரூ.2,983க்கு விற்பனை



சென்னை: சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர்விலை இந்த மாதம் 66 ரூபாய் 50 காசுகள் உயர்ந்துள்ளது. அதன்படி, ஒரு சிலிண்டர் விலை ரூ. 2,983 ஆக உள்ளது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் மாதந்தோறும் நிர்ணயம் செய்வது வழக்கம்.

வணிக பயன்பாட்டு சிலிண்டர் விலை உயர்வு இந்த மாதம் எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, வணிக பயன்பாட்டிற்கான கியாஸ் சிலிண்டரின் விலை உயர்ந்துள்ளது. 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூபாய் 66.50 காசுகள் உயர்ந்து 2,983 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோகசமையல் எரிவாயு விலையில் எவ்வித மாற்றமும் இன்றி 957.50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஆரம்பித்த மேற்காசிய போரின் காரணமாக பிப்ரவரி-ஜூன் மாதம் வரை கச்சா எண்ணெய் விலை கணிசமாக அதிகரித்தது. இதன் விளைவாக எரிபொருள் விலையும் உலகளவில் பன்மடங்கு உயர்ந்தது. அதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல. ஜூன் இறுதியில் அமெரிக்கா - ஈரான் இடையேபோர்நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டநிலையில் எரிபொருள் விலையும் குறைந்தது.

அதன் விளைவாக ஜூலை மாதம் ரூ. 183.5 மற்றும்ஆகஸ்ட்மாதம் ரூ. 192 என இரண்டு மாதங்களாக வணிக பயன்பாட்டு சிலிண்டர் விலை குறைக்கப்பட்டது. ஆனால் மீண்டும் இரு நாடுகளும் தாக்குதலை தொடங்கிய நிலையில் கச்சா எண்ணெய் விலை மீண்டும் உயர்ந்தது. இதனால் செப்டம்பர் 1 ஆம் தேதி வணிக பயன்பாட்டு சிலிண்டர் விலை ரூ. 10.50 உயர்த்தப்பட்டு ரூ. 2,916.50-க்கு விற்பனை செய்யப்பட்டது. மாதமும் வணிகசிலிண்டர் விலையானது ரூ. 66.50 அதிகரித்திருக்கிறது. அதேசமயம் பெட்ரோல், டீசல் விலை கடந்த மே மாதத்திற்கு பிறகு மாற்றமின்றி விற்பனையாகி வருகிறது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

கோவை கொடிசியா வளாகத்தில், 'ரா மேட் இந்தியா 2026' கண்காட்சி

## அக்டோபர் 6ந்தேதி துவங்கி மூன்று நாட்கள் நடைபெற உள்ளதாக ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்



கோவையில் 5-வது பதிப்பாக நடைபெற உள்ள ராமேட் இந்தியா 2026 சர்வதேச மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி கண்காட்சி குறித்த செய்தியாளர்கள் சந்திப்பு கோவை கொடிசியா அலுவலகத்தில் நடைபெற்றது. கொடிசியா தலைவர் ரங்கசாமி, கண்காட்சித் தலைவர் ஸ்ரீதர் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

அவர்கள் கூறியதாவது, கோவை மற்றும் சுற்றுவட்டாரங்களில் உள்ள ஆட்டோமொபைல், ஜவுளி, வார்ப்புத் தொழில், பொறியியல் உள்ளிட்ட உற்பத்தித் துறைகளுக்குத் தேவையான தரமான மூலப்பொருட்களை ஒரே இடத்தில் பெறுவதற்கான வாய்ப்பை இந்தக் கண்காட்சி ஏற்படுத்தும்.

இரும்பு, எஃகு, அலுமினியம், செம்பு உள்ளிட்ட உலோகங்கள், பிளாஸ்டிக், ரப்பர், தொழில்துறை வேதிப்பொருட்கள், பொதியிடல் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு மூலப்பொருட்களுடன், மூலப்பொருள் கையாளுதல், கிடங்கு மேலாண்மை, போக்குவரத்து, கழிவு மறுசுழற்சி உள்ளிட்ட தொழில்நுட்பங்களும் இடம்பெற உள்ளன. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான மானியத் திட்டங்கள் குறித்த தகவல்களும் வழங்கப்பட உள்ளன.

அக்டோபர் 6 முதல் 8-ம்தேதி வரை 3 நாட்கள் கொடிசியா வர்த்தக வளாகத்தில் நடைபெறும் இந்தக் கண்காட்சி, தொழில் நிறுவனங்களுக்கு இடையிலான வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் நடத்தப்படுகிறது.

இதில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடாகா, குஜராத், உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து பலர் பங்கேற்க உள்ளதாக தெரிவித்தனர்.



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு வருவாய்துறை ஊழியர்கள் சங்கம் சார்பில் மாலை 3 மணி அளவில் காத்திருப்பு போராட்டம் நடைபெற இருந்தது. இதனை அறிந்த மாவட்ட ஆட்சியர் பத்மஜா அலுவலர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்ட நிலையில் தமிழ்நாடு வருவாய்த்துறை ஊழியர்கள் சங்க கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என மாவட்ட ஆட்சியர் பத்மஜா உறுதி அளித்ததனால் போராட்டம் தற்காலிகமாக வாபஸ் பெறப்பட்டது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலத்தில் நேற்று இரவு பெய்த மழையால் சின்னசேலம் சேலம் மெயின் ரோட்டில் ஆங்காங்கே குளம் போல் தேங்கி நிற்கும் நீரால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது அது மட்டுமல்லாமல் தேங்கி நிற்கும் தண்ணீரில் கொசுக்கள் இருப்பதால் கொசுவினால் டெங்கு போன்ற காய்ச்சல் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதால் தண்ணீரை நெடுஞ்சாலைத் துறையினரும் சின்னசேலம் பேரூராட்சி நிர்வாகம் தேங்கி நிக்காதவாறு அந்தத் தண்ணீர் செல்வதற்கு வழி ஏற்படுத்தி தருமா என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டம் – மத்தூர் ஒன்றியம் சாமல்பட்டி ஊராட்சியில்

## அரசு பேருந்து ஊருக்குள் வராமல் பைபாஸ் வழியாக செல்வதால் பயணிகள் அவதி



கிருஷ்ணகிரி மாவட்டம் – மத்தூர் ஒன்றியம் சாமல்பட்டி ஊராட்சி சாமல்பட்டி ரயில் நிலையம் மற்றும் சாமல்பட்டி பேருந்து நிறுத்தத்தில் இருந்து வெளியூர்களுக்கு செல்லும் பொதுமக்களுக்கு அரசு பேருந்து சேவை முறையாக கிடைக்கவில்லை என புகார் எழுந்துள்ளது.

குறிப்பாக திருவண்ணாமலை – பெங்களூரு உள்ளிட்ட வழித்தடங்களில் இயக்கப்படும் TN25N0792 தமிழ்நாடு அரசு பேருந்து நடத்துனர் திருக்குமார் என்பவர் பேருந்து ஓட்டுநரிடம் பைபாஸ் வழியாக செல்லுங்கள் என்று கூறி வருவது வழக்கமாக உள்ளது சாமல்பட்டி ஊருக்குள் வந்து பயணிகளை ஏற்றிச் செல்லாமல், பைபாஸ் வழியாக செல்வதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதனால் சாமல்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், மாணவர்கள், பெண்கள் மாற்றுத்திறனாளர்கள் மற்றும் வெளியூர் செல்லும் பயணிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருவதாக தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து பலமுறை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் பள்ளி மாணவர்கள் பெற்றோர்கள் கூறுகின்றனர்.

பொதுமக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அதிகாரிகள் உடனடியாக ஆய்வு செய்து, பேருந்துகள் முறையாக சாமல்பட்டி ஊருக்குள் வந்து பயணிகளை ஏற்றிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், புகார்கள் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி, விதிமீறல் உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட தமிழ்நாடு அரசு பேருந்து நடத்துனர் திருக்குமார்என்பவர்மீதுதுறைரீதியானநடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் பள்ளி மாணவர்கள் மாணவிகள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கீரல்வாடி கிராமத்தில்

## தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலுக்கு மகளிரணியினர் உற்சாக வரவேற்பு





செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடை தேர்தலில் மதசார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி சார்பில் போட்டியிடும் தமிழக வெற்றி கழக வேட்பாளர் திருமதி மரகதம் குமரவேல் அவர்களுக்கு மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் கீரல்வாடி கிராமத்தில் வேட்பாளருக்கு மேளதாளம் முழங்கபட்டாசுவெடித்து ஆரத்தி எடுத்து மாலை அணிவித்து மலர் தூவி மிகுந்த உற்சாகத்துடன் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் வரவேற்பு அளித்தனர் இதில் கீரல்வாடி மகளிர் அணி நிர்வாகிகள் கலைவாணி. ரீட்டா. மகா. ஜீவா, வினிதா, ராஜலட்சுமி, காவியா, சுவாதி,கிளி, கற்பகம், மாரியம்மாள், மணிமேகலை, ஜெயந்தி,சாந்தி. பிரபு பூவரசன் கார்த்திக் ரஞ்சித். மற்றும் விசிக நிர்வாகிகள் ஆதிகேசவன் சதாசிவம் உள்ளிட்ட மதசார்பற்ற சமூகநீதி வெற்றி கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்

## தேசிய அளவிலான Hand to Hand Fighting Sport போட்டியில் தென்காசி மாணவ, மாணவியர் சாதனை

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் நடைபெற்ற 6-வது தேசிய மாவட்ட Hand to Hand Fighting Sport கழகத் தலைவர் ஜெகதீஸ் திற்கு பெருமை சேர்த்தனர்.மேலும்,தற்காப்புக் கலைப் பிரிவில்



அளவிலான Hand to Hand Fighting Sport போட்டியில் தென்காசி மாவட்டத்தைச்சேர்ந்த மாணவ, மாணவியர் பல்வேறு பதக்கங்களைவென்றுசாதனை படைத்தனர்.

தமிழ்நாடு Hand to Hand Fighting Sport கழக மாநிலத் தலைவர் முகமது அனாஸ் ஆலோசனையின் பேரில், தென்காசி தலைமையில் மாணவ, மாணவியர் தேசிய போட்டியில் பங்கேற்றனர்.இதில் ஜெகதீஸ் மற்றும் அபிபாலா ஆகியோர் தங்கப்பதக்கமும், ஆதர்சினி நாச்சியார் வெள்ளிப் பதக்கமும், வர்ஷனா, ஹாசினி,சுதேவ்நாராயணா, ஈஸ்வர் ஆகியோர் வெண்கலப் பதக்கமும் வென்று தென்காசி மாவட்டத் ஆதர்சினி நாச்சியார் வெள்ளிப் பதக்கமும், அபிபாலா வெண்கலப் பதக்கமும் வென்று சாதனை படைத்தனர்.

தேசிய அளவிலான போட்டியில் பதக்கங்கள் வென்று சாதனை படைத்த மாணவ, மாணவியரை பெற்றோர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டினர்.

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே

## தண்ணீரின்றி கருகும் சம்பா நெற்பயிர்கள் விவசாயிகள் கோரிக்கை

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே பிள்ளையார் தாங்கல், மாதர் சூடாமணி, கூத்தூர், உடையூர், நடுத்திட்டு, மோவூர் உள்ளிட்ட கிராமங்களில் சம்பா பருவத்திற்காக நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது.



போதிய பாசன நீர் கிடைக்காததால் பல வயல்களில் விதைகள் முறையாக முளைக்காமலும், முளைத்த நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகியும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட வயல்களை காப்பாற்ற வடக்கு ராஜன் வாய்க்காலில் 6 நாட்களுக்கு 500 கன அடி தண்ணீர் திறந்துவிட்டால், வயல்களுக்கு உயிர் தண்ணீர் வழங்க முடியும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏற்கனவே வேளாண் துறை அதிகாரிகள் பாதிக்கப்பட்ட வயல்களை நேரில் ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்து நடவடிக்கை எடுப்பதாக கூறியதாகவும், ஆனால் இதுவரை தண்ணீர் கிடைக்கவில்லை என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

ஏக்கருக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து சாகுபடி செய்த நிலையில், தண்ணீர் இல்லாததால் முதலீடு முழுவதும் வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், சில விவசாயிகள் மீண்டும் நெல் விதைப்பு செய்து வருவதாகவும் கூறினர்.

கீழணை பாசன விவசாயிகள் சங்கத்தலைவர் விநாயகமூர்த்தி கூறுகையில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. சம்பா நெற்பயிர்களை காப்பாற்ற உடனடியாக வடக்கு ராஜன் வாய்க்காலில் தண்ணீர் திறக்க வேண்டும். இல்லையெனில் விவசாயிகள் சங்கம் சார்பில் போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்தார்.

இதனால் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் கருகி வரும் சம்பா நெற்பயிர்களை காப்பாற்ற அதிகாரிகள் உடனடியாகநடவடிக்கைஎடுத்து, வடக்கு ராஜன் வாய்க்காலில் தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டம் இறச்சகுளம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் குடிநீர் குழாய் உடைந்து, குடிநீர் தொடர்ந்து வீணாகி வருவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.பல்வேறுபகுதிகளில்குடிநீருக்காகமக்கள்சிரமப்பட்டுவரும்நிலையில், இவ்வாறு குடிநீர் வீணாகி வருவது வேதனை அளிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். குழாய் உடைப்பு குறித்து ஊராட்சி நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். எனவே, குடிநீர் குழாய் உடைப்பை உடனடியாக சீரமைத்து, குடிநீர் வீணாவதை தடுக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில்

## பள்ளிக்கே வந்து வானொலி நிகழ்ச்சி ஒலிப்பதிவு



சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களும் பங்கேற்கும் வகையில், அகில இந்திய வானொலி மதுரை நிலையத்தின் 'சிறுவர் பல்சுவை' நிகழ்ச்சிக்கான ஒலிப்பதிவு பள்ளி வளாகத்திலேயே நடைபெற்றது.

வழக்கமாக மாணவர்கள் மதுரை வானொலி நிலையத்திற்குநேரில்சென்றுநிகழ்ச்சியில்பங்கேற்று வந்த நிலையில், இந்த ஆண்டு வானொலி நிலையத்தின் முயற்சியாக பள்ளிக்கே வந்து ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

பள்ளித் தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் தலைமையில், ஆசிரியைகள் சிவரஞ்சனி, ஆர்த்தி, பாண்டிசெல்வி,வினோதாஆகியோர்மாணவர்களின் திறமைக்கு ஏற்ப நிகழ்ச்சிகளைத் தயாரித்து, அனைத்து மாணவர்களும் பங்கேற்க ஏற்பாடுகளை செய்தனர்.

மதுரை அகில இந்திய வானொலி நிலைய நிகழ்ச்சி தயாரிப்பு அலுவலர் வேல்முருகன் மற்றும் பகுதி நேர அறிவிப்பாளர்நாகநந்தினிஆகியோர்மாணவர்களின் தனித்திறன்களை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்தனர். இந்நிகழ்ச்சி வரும் மாதம் வானொலியில் ஒலிபரப்பாகும் என தெரிவிக்கப்பட்டது.

## போக்குவரத்துத்துறை ஓய்வூதியதாரர்களுக்கு மாதத்தின் 1ம் தேதி ஓய்வூதியம் வழங்க வேண்டும்

அரசியல் ஆலோசகர் சிவகுமார் கோரிக்கை



தூத்துக்குடியைச் சேர்ந்த 30 ஆண்டுகள் அரசுத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர், கடந்த 10 ஆண்டுகளாக அரசியல், சட்ட ஆலோசகராக ஆய்வு மேற்கொண்டு, தனது ஆய்வுகளை புத்தகமாக வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். அவர் தெரிவிக்கையில், தமிழகத்தில் தற்போதைய அரசு பொறுப்பேற்ற பின்னர் பொதுமக்கள் லஞ்சமின்றி பட்டா பெறக்கூடிய சூழல் உருவாகியுள்ளதாக தனது ஆய்வின் அடிப்படையில் பாராட்டுத் தெரிவித்துள்ளார். மேலும், கடந்த 10 ஆண்டுகளாக நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்த போக்குவரத்துத் துறை தொழிலாளர்களின் பஞ்சப்படி (DA) தொடர்பான பிரச்னைக்கு 100 நாட்களுக்குள் தீர்வு காணப்பட்டதாகவும், இதன் மூலம் லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டு,இதற்காக முதலமைச்சருக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.உள்ளாட்சிப்பிரதிநிதிகள்,சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு நிர்வாக அறிவு,சட்ட விழிப்புணர்வு மற்றும் லஞ்சமற்ற நல்லாட்சி தொடர்பான பயிற்சிகளை வழங்கும் வகையில் பயிற்சி மையம் அமைக்க திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இதற்காக சென்னை நகரில் அரசு இடம் ஒதுக்கீடு செய்து வழங்கினால், மக்கள் பிரதிநிதிகளுக்கு இலவசமாகபயிற்சிஅளிக்கத்தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். மேலும், மின்சார வாரியத்தில் ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு மாதத்தின் 1-ம் தேதியே ஓய்வூதியம் வழங்கப்பட்டு வரும்நிலையில்,போக்குவரத்துத்துறையில்ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு 5-ம் தேதி ஓய்வூதியம் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த பாகுபாட்டை நீக்கி, போக்குவரத்துத் துறைஓய்வூதியதாரர்களுக்கும் மாதத்தின் 1-ம் தேதியே ஓய்வூதியம் வழங்குவதற்கு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்எனஅவர்கோரிக்கைவிடுத்துள்ளார்.

## த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேலுக்கு ஆதரவாக அமைச்சரின் வித்தியாசமான அணுகுமுறையால் தண்டரை புதுச்சேரியில் கவனம் ஈர்த்த அமைச்சர் வினோத்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத்தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ள நிலையில், அச்சிறப்பாக்கம் ஒன்றியம் தண்டரை புதுச்சேரியில் தவெக வேட்பாளர் கே. மரகதம் குமரவேலை ஆதரித்து வேளாண்மைத் துறை அமைச்சர் வினோத் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

நூறு நாள் வேலைத் திட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த கிராம மக்களை சந்திப்பதற்காக, கட்சி நிர்வாகிகளுடன் நடந்தே பணியிடத்திற்குச் சென்ற அமைச்சர், மரத்தடியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த தொழிலாளர்களுடன் நேரடியாக அமர்ந்து கலந்துரையாடியது அப்பகுதியில் கவனம் பெற்றது.

மக்களிடம் அரசின் சாதனைகள் குறித்து எடுத்துரைத்த அமைச்சர், விசில் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டதுடன், பொதுமக்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகளையும் நேரடியாக கேட்டறிந்தார்.

அமைச்சர் வினோத் பொதுமக்களுடன் தரையில் அமர்ந்து நீண்ட நேரம் கலந்துரையாடிய காட்சி அங்கிருந்தவர்களின் கவனத்தை ஈர்த்தது. "அமைச்சர் என்ற அதிகார தோரணையின்றி, நம்மில் ஒருவராக வந்து அமர்ந்து பேசுகிறார்" என அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

தொடர்ந்து, பொதுமக்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொள்ள விரும்பிய அமைச்சர், அவர்களின் அனுமதியைப் பெற்ற பின்னரே புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

மேலும், சுட்டெரிக்கும் வெயிலில் நூறு நாள் வேலை செய்து களைப்பில் இருந்த மக்களுக்கு அமைச்சர் வினோத் பிஸ்கட் மற்றும் குளிர்பானங்களை வழங்கினார்.

மக்களுடன் அமர்ந்து பேசியதோடு மட்டுமின்றி, அவர்களின் களைப்பையும் கருத்தில் கொண்டு அமைச்சர் செய்த இந்த செயல், அங்கிருந்த பொதுமக்களிடையே நெகிழ்ச்சியையும் வரவேற்பையும் ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து, அப்பகுதியில் வீடு வீடாகச் சென்று பொதுமக்களை சந்தித்த அமைச்சர் வினோத், தவெக வேட்பாளர் கே. மரகதம் குமரவேலுக்கு ஆதரவாக "விசில்" சின்னத்தில் வாக்களிக்குமாறு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

## கெண்டிரச்சேரியில் மதுராந்தகம் தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலுக்கு அளித்த அமோக வரவேற்பினால் களைகட்டிய தேர்தல் பிரசாரம்



செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் சட்டமன்றத்தொகுதி இடைத்தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள நிலையில், மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட வயலூர், ஆமையம்பட்டு, வசந்தவாடி, வில்வராயநல்லூர், கெண்டிரச்சேரி, முதுகரை உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட கிராமங்களில் தவெக வேட்பாளர் மரகதம் குமரவேல் இன்று சூறாவளி சுற்று பயணம் மேற்கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். கெண்டிரச்சேரி கிராமத்திற்கு வாக்கு சேகரிக்கவந்தஅவருக்கு தவெக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பேண்ட் வாத்தியங்கள் முழங்க உற்சாக வரவேற்புஅளித்தனர்."மலர் கிரீடம் மற்றும் சால்வை அணிவித்ததுடன், சுமார் 10 அடி உயரமுள்ள பிரமாண்ட ராட்சத ரோஜா மாலையை" கிரேன் மூலம் வேட்பாளருக்கு அணிவித்தனர்.

மேலும், ஜே.சி.பி. இயந்திரம் மூலம் கிலோ கணக்கில் மலர்களை தூவியும், வண்ணக் காகிதப் பூக்களை தூவியும்,முருகர் புகைப்படம் கொடுத்தும் வேட்பாளருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனால் அப்பகுதியில் தேர்தல் பிரசார களைகட்டியது.

வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரத்தில் பங்கேற்ற சின்னத்திரை நடிகரும், பாண்டியன் ஸ்டோர்ஸ் புகழ் பாண்டி ரவியையும் பொதுமக்கள் ஆர்வத்துடன் சூழ்ந்து, அவருடன் போட்டி போட்டுக்கொண்டு செல்பி மற்றும் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டனர்.

பிரசாரத்தின் போது பேசிய மரகதம் குமரவேல்,பட்டா, மின்சாரம், வீடு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணநடவடிக்கைஎடுப்பதாகவும், தவெக தேர்தல் வாக்குறுதிகள் மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துரைத்தும் விசில் சின்னத்திற்கு வாக்களித்து தன்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில்வெற்றிபெறசெய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்து வாக்கு சேகரித்தார்.

மேலும் தவெக வேட்பாளர்சென்றஇடங்களிலெல்லாம்கிராமமக்கள் பட்டாசுகள் வெடித்தும், மலர்கள் தூவியும், பிரமாண்ட மலர் மாலைகள் மற்றும் சால்வைகள் அணிவித்தும் வரவேற்றனர். பெண்கள் ஆரத்தி எடுத்தும், பொதுமக்கள் விசில் அடித்தும் உற்சாகம் காட்டினர்.

## ஆலங்குளம் ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் ஒன்றிய பணி மேற்பார்வையாளக்கு பணி நிறைவு விழா



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் ஒன்றிய பணி மேற்பார்வையாளராக லிசி ராஜ குளோரி அவரது பணி நிறைவு விழா நடைபெற்றது.

தென்காசி மாவட்டத்திற்குட்பட்ட வாசு தேவ நல்லூர் செங்கோட்டை கடையம் ஆலங்குளம் ஆகிய ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய பணி மேற்பார்வையாளராக சிறப்பாக பணியாற்றி முதிர்வுகாரணமாகபணி நிறைவு செய்துள்ளர் அவரது பணியினை பாரட்டும் விதமாக பாரட்டு விழா நடைபெற்றது

முன்னதாக ஆலங்குளம் ஒன்றிய சேர்மன் வாழ்த்தி பேசினார் ஆலங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர் முருகேசன், மற்றும் அன்னத்தாய் தலைமை வகித்தனர்

உதவிவட்டாரவளர்ச்சி அலுவலர் கந்தசாமி, நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்

லிசி ராஜ குளோரி அவரது கணவர் சீனி வரவேற்று பேசினார்

நிகழ்வில் கடங்கனேரி ஊராட்சி மன்ற துணை தலைவர் தங்க கிருஷ்ணன், அரசு ஒப்பந்ததாரர்கள் மணிகண்டன், முத்துபாண்டியன் ஒன்றிய பொறியாளர்கள் ஒன்றிய மேற் பார்வையாளர்கள், ஊராட்சி செயலாளர்கள் ஒன்றிய அலுவலக பணியாளர்கள் உறவினர்கள் மகன்கள் பிரைட் சிங், சுந்தர்சிங், மருமகள் செல்ஸி உள்பட பலர் கலந்து கொண்டார்கள்

## கீழ வீராணம் ஊராட்சியில் நல்லாட்சி விழா ஐந்து ஆண்டுகள் சிறப்பாக செயல்பட்ட ஊராட்சி நிர்வாகத்திற்கு பொதுமக்கள் பாராட்டு



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், கீழ வீராணம் ஊராட்சி மன்ற வளாகத்தில், கடந்த ஐந்து ஆண்டுகள் சிறப்பாக செயல்பட்டு நிறைவடைந்ததையொட்டி, கீழ வீராணம் ஊர் பொதுமக்கள் சார்பில் ஊராட்சி மன்ற நல்லாட்சி விழா நடைபெற்றது. ஜமாத் தலைவர் காஜா மைதீன் தலைமை தாங்கினார்.

முன்னாள் ஜமாத் தலைவர்மிய்யாக்கன்னு , வழக்கறிஞர் சாகுல் ஹமீது, நீர்ப்பாசனக் குழுத் தலைவர் முத்துபாண்டி யன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். முஸ்லீம் பள்ளி தாளாளர் சிந்தா மதார் , முன்னாள் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் தமிழ் என்ற முகமது முஸ்தப்பா, அரசு மருத்துவர் மணிமலா, ஆகியோர் கீழ வீராணம் ஊராட்சி மன்ற தலைவர் அ. வீரபாண்டியன், துணைத் தலைவர் ஜமீலாபீவி காஜா மைதீன், ஊராட்சி செயலர் பாண்டியராஜ்,வார்டு உறுப்பினர்கள் பிரியா,மாரியப்பன்,சாகுல் ஹமீது, சுமையாமரியம், முகம்மது அனிபா,ஞானதாஸ், பிரபுதேவா, ஜெயலட்சுமி, சூர்யா, வேல் முருகன், புஷ்பா, உள்ளிட்ட ஊராட்சி நிர்வாகத்தினரை வாழ்த்திப் பேசினார்கள் நிகழ்வில் ஊராட்சி செயலர்கள் முருகே ஷன், குமரேசன், முன்னாள் ஜமாத் துணைத்தலைவர் முகமது உசேன், மனிதநேய மக்கள் கட்சி நிர்வாகி கான்சா மைதீன்,முகமது இஸ்மாயில், ஷாஜாகான், முகைதீன் காசிம், அப்துல் கபார்கான்,முகமது இஸ்மத், செய்யது அலி, நடராஜன்,

கிராமநிர்வாகஅலுவலர் சுதர்சன பாண்டியன், கிராம உதவியாளர் முருகராஜா, கிராம செவிலியர் தங்கதுரைச்சி, மகளிர் சுயஉதவிக் குழு நிர்வாகி மகேஸ்வரி, கணினி இயக்குநர் காசி அருணாசலம், பணித்தள பொறுப்பாளர்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பராமரிப்பாளர்கள் மற்றும் இயக்குநர்கள், அரசு ஒப்பந்ததாரர், சுகாதார ஊக்குநர், தூய்மை காவலர்கள், ஊராட்சி தூய்மைப் பணியாளர்கள், உறிஞ்சுகுழி பராமரிப்பாளர் மற்றும் ஊராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி மாநகராட்சி சாதாரண கூட்டத்தில் திமுக உறுப்பினர்கள் செயல்பாடு: தவெக மாமன்ற உறுப்பினர் சி.மந்திரமூர்த்தி கடும் கண்டனம்



தூத்துக்குடி மாநகராட்சியின் சாதாரண மாமன்றக் கூட்டத்தில் திமுக மாமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் குறித்து தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த 51-வது வார்டு மாமன்ற உறுப்பினர் சி. மந்திரமூர்த்தி B.A., B.L. கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மாநகராட்சி கூட்டத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், வைரஸ் காய்ச்சல் பரவலைத் தடுப்பது, குடிநீரில் அசுத்தம் கலந்து வருவது உள்ளிட்ட பொதுமக்கள் சார்ந்த முக்கிய பிரச்சினைகள் குறித்து திமுக மாமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளாக அமைதியாக இருந்த திமுக மாமன்ற உறுப்பினர்கள், இந்தக் கூட்டத்தில் திடீரென ஆவேசமாக செயல்பட்டு,மாநகராட்சி ஆணையாளர் மற்றும் அதிகாரிகளிடம் மிரட்டும் தொனியில் நடந்து கொண்டதாகவும், இது ரவுடித்தனமான மனப்போக்கை வெளிப்படுத்துவதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து மாமன்றத்தில் விவாதிப்பதற்குப் பதிலாக, கூட்டத்தைத் திசை திருப்பும் வகையில் திமுக உறுப்பினர்கள் செயல்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திமுக மாமன்ற உறுப்பினர்களின் இந்தச் செயல்பாட்டை தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் கடுமையாகக் கண்டிப்பதாகவும், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்க்கு அவப்பெயர்ஏற்படுத்தும் நோக்கில் செயல்படுவதாக அவர் கருதுவதாகவும் சி. மந்திரமூர்த்தி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தூத்துக்குடி மாநகராட்சியில்

## LR காப்பி வழங்கிய கோப்புகள் முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும்: பாஜக சித்ராங்கதன் வலியுறுத்தல்



தூத்துக்குடி மாநகராட்சியில் LR காப்பி (Land Record Copy) வழங்கும் நடைமுறையில் விதிமீறல்கள் அல்லது குளறுபடிகள் நடைபெற்றுள்ளதா என்பது குறித்து முழுமையான விசாரணை நடத்த வேண்டும் என தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாஜகதலைவர் சித்ராங்கதன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நகர்ப்புறங்களில் நிலங்களைப் பத்திரப்பதிவு செய்வதற்கு முக்கிய ஆவணங்களில் ஒன்றாக LR காப்பி பயன்படுத்தப்படுகிறது. நிலத்தின் சர்வே எண், உட்பிரிவு, பரப்பளவு, நிலத்தின் வகைப்பாடு உள்ளிட்ட பதிவுசார் விவரங்களை அறிந்து கொள்ளவும், நிலம் தொடர்பான பல்வேறு பணிகளுக்கும் இந்த ஆவணம் பயன்படுகிறது.

தூத்துக்குடி மாநகராட்சி மூலம் பொதுமக்களுக்கு LR காப்பி வழங்கப்பட்டுவரும்நிலையில், கடந்த பிப்ரவரி மாதத்திலேயே பழைய கையேடு முறையில் ஆவணங்களைவழங்காமல்,ஆன்லைன் மற்றும் டிஜிட்டல் முறையில் மட்டுமே வழங்க வேண்டும் என வருவாய்த்துறை உதவி இயக்குநர் அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது.

இந்த அறிவுறுத்தலுக்குப் பின்னரும் மாநகராட்சி மூலம் கையேடு முறையில் LR காப்பி வழங்கப்பட்டு வருவதாக கூறப்படுவது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துவதாக சித்ராங்கதன் தெரிவித்துள்ளார்.

பிப்ரவரி மாதத்திற்கு முன்பே LR காப்பி பெறுவதற்காக விண்ணப்பம் அளிக்கப்பட்டதாகக் கூறி, அந்த விண்ணப்பங்களின் அடிப்படையில் தற்போது கையேடு முறையில் ஆவணங்கள் வழங்கப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தால், அவை எந்த தேதியில் பெறப்பட்டன, யார் அனுமதி வழங்கினர், எந்த அதிகாரத்தின் அடிப்படையில் தற்போது LR காப்பிகள் வழங்கப்படுகின்றன என்பது குறித்து மாநகராட்சி நிர்வாகம் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், பிப்ரவரி மாதத்திற்குப் பிறகு கையால் எழுதப்பட்ட LR காப்பியை பயன்படுத்தி பத்திரப்பதிவு செய்யக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில்,அதன் பின்னரும் சார்பதிவாளர் எந்த அடிப்படையில் பத்திரப்பதிவு செய்தார் என்பது குறித்தும் ஆய்வு செய்ய வேண்டும் என சித்ராங்கதன் கூறியு ள்ளார்.

இதன் காரணமாக மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். இதற்கு அனுமதி வழங்கிய அதிகாரி யார்,எந்த கோப்பின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது என்பது குறித்து முழுமையாக ஆய்வு நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

விதிமீறல் அல்லது தவறு நடைபெற்றது உறுதி செய்யப்பட்டால், அதற்குப் பொறுப்பான அதிகாரிகளை கண்டறிந்து, அவர்கள் மீது துறை ரீதியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், LR காப்பி வழங்கும் நடைமுறையை முழுமையாக டிஜிட்டல் முறைக்கு மாற்றி, விண்ணப்பித்த தேதி, அனுமதி வழங்கிய அதிகாரி, ஆவணம் வழங்கப்பட்ட தேதி உள்ளிட்ட அனைத்து விவரங்களும் வெளிப்படையாகப் பதிவாகும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாஜக தெற்கு மாவட்ட தலைவர் சித்ராங்கதன் வலியுறுத்தியுள்ளார்.

## கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் முதல் இளநிலை மாணவர் மாநாடு நடைபெற்றது




இந்திய வாய்முக மற்றும் தாடை நோயியல் சங்கத்தின், முதல் இளநிலை மாணவர் மாநாடு, கோவை, ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் சார்பில் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் இந்தியா முழுவதிலும் இருந்து பல் மருத்துவ இளநிலை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டை ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் மற்றும் இணை நிர்வாக அறங்காவலர் நரேந்திரன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்திய வாய்முகமற்றும்தாடை நோயியல் சங்கத்தின், தலைவர் டாக்டர் நதீம் தலைமை உரையாற்றினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல்வரும், மாநாட்டு ஏற்பாட்டுத் தலைவருமான டாக்டர் ஜெ. தினகர் வரவேற்புரையாற்றினார். கல்லூரியின் துணை முதல்வரும், மாநாட்டு ஏற்பாட்டுச் செயலாளருமான டாக்டர் எஸ். கௌரி நன்றியுரை வழங்கினார்.

இம்மாநாட்டில் இந்தியா முழுவதிலும் உள்ள 30 பல் மருத்துவக் கல்லூரிகள் பங்கேற்றன. 750-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பதிவு செய்து கலந்து கொண்டனர். வாய்முக மற்றும் தாடை நோயியல்துறையில் இளநிலைபல் மருத்துவக்கல்விக்கானஒருமுக்கியமான கல்வி நிகழ்வாக இம்மாநாடு அமைந்தது.

மாநாட்டின் முக்கிய சிறப்பம்சமாக, பல் மருத்துவக் கல்வி மற்றும் வாய்முக மற்றும் தாடை நோயியல் துறையில் சிறப்பான பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், இந்திய வாய்முக மற்றும் தாடை நோயியல் சங்கத்தின் சார்பில் ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு "நிறுவனச் சிறப்பு விருது" வழங்கப்பட்டது, இம்மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்ததன் மூலம், இளநிலை பல் மருத்துவ மாணவர்களிடையே கல்விச் சிறப்பு, அறிவியல் ஆராய்ச்சி, புதுமை மற்றும் தொழில்முறை வளர்ச்சியை ஊக்குவிப்பதில் இந்நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு வெளிப்பட்டது.

# 100% பள்ளி வருகை மற்றும் கல்வியில் முன்னேற்றம் பெற்ற மாணவர்களுக்கு திரைப்பட விருந்து



ராணிப்பேட்டை நகராட்சி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட நூலகத்தில், அரசு பள்ளிகளில் 100 சதவீத வருகை புரிந்த மாணாக்கர்கள் மற்றும் வகுப்பறைத் தேர்வுகளில் நல்ல முன்னேற்றம் அடைந்த மாணாக்கர்களை அங்கீகரிக்கும் வகையில், மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக் கல்வித்துறை இணைந்து சிறப்பு திரைப்படக் காட்சிக்கு ஏற்பாடு செய்தது.

காலாண்டுத் தேர்வு விடுமுறையை முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், 250 மாணவ-மாணவியர்களுக்கு இலவசமாக குழந்தைகளுக்கான திரைப்படங்கள் திரையிட ப்பட்டன. Finding Nemo, Jurassic Park, The Wild Robot உள்ளிட்ட திரைப்பட ங்களை மாணவர்கள் உற்சாகத்துடன் கண்டுகளித்தனர்.

இந்நிகழ்வை ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, மாணவ-மாணவியர்களுடன் கலந்துரையாடினார். தொடர்ந்து கற்றலை மாணவர்களுக்கு மகிழ்வான அனுபவமாக மாற்றவும், அவர்களின் கல்வி ஆர்வத்தை ஊக்குவிக்கவும் இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி மோகனா, மாவட்டக் கல்வி அலுவலர்கள் திரு. சிவராமன் (தொடக்கநிலை), திரு. துரைவேல் (இடைநிலை) உள்ளிட்ட கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## உலக மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு,

# கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை, ஸ்ரீ ராமகிருஷ்ணா புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பாக "தி பிங்க் பாதை" எனும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது




கோவை ஆவாரம்பாளையம்பகுதியில்உள்ள ஸ்ரீராமகிருஷ்ணாமருத்துவமனை, ஸ்ரீ ராமகிருஷ்ணா புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில்,மார்பகப்புற்றுநோய் மற்றும் மார்பக நலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் "தி பிங்க் பாதை" என்ற விழிப்புணர்வு தொகுப்பு ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்பட்டது.

இந்த விழிப்புணர்வு தொகுப்பை கோவை மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா தலைமை விருந்தி னராகக் கலந்து கொண்டு, எஸ். என். ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாகஅறங்காவலர்டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் முன்னிலையில் அறிமுகப்படுத்தி வைத்தார்.

இந்நிகழ்வில், அறக்கட்டளையின் தலைமை செயல் அதிகாரி சி.வி. ராம்குமார், தலைமை நிர்வாக அதிகாரி டி. மகேஷ்குமார், ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் டாக்டர் ராஜகோபால் மற்றும் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் எஸ். அழகப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தி பிங்க் பாதை" மூலம் மார்பகப் புற்றுநோய் குறித்த பல்வேறு தகவல்கள் பொதுமக்களுக்கு எளிய முறையில் விளக்கமாககொடுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ராமகிருஷ்ணா புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநரும் மருத்துவ புற்றுநோயியல் நிபுணருமான டாக்டர் பி. குகன் இது குறித்து செய்தியாளர்களிடம் கூறியதாவது..

இளம் பெண்களிடையே மார்பக புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருவதால், பெண்கள் விழிப்புண ர்வுடன் இருந்து ஆரம்ப நிலையிலேயே நோயை கண்டறிந்து உரிய சிகிச்சை பெறுவது அவசியம் ஆகும்.

பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தி பிங்க் பாதை முன்னெடுக்கப்படுகிறது. இதில் மார்பக புற்றுநோய் என்றால் என்ன, அதன் அறிகுறிகள், ஆபத்து காரணிகள், ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல், நோயறிதல் பரிசோதனைகள், சிகிச்சை முறைகள், தடுப்பு நடவடிக்கைகள், நமக்கு பாதிப்பு உள்ளதா என்பதை அறிதல் மற்றும் புற்றுநோயை வென்றவர்களின் அனுபவங்கள் என 9 முக்கிய தலைப்புகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. பெண்களிடையே விழிப்புணர்வை அதிகப்படுத்தி ஆரம்பநிலையில் கண்டறிந்து உரிய சிகிச்சை பெற இந்த தி பிங்க் பாதை உதவும் என தெரிவித்தார்.

## பாரம்பரிய நீர் மேலாண்மை மீட்டெடுக்கும் வகையில்

# கோவையின் பழமையான சோமயம்பாளையம் ஏரி புணரமைக்கும் பணிகள் நிறைவு பெற்றது!




நீர் மேலாண்மையில் நீண்டபாரம்பரியம்உள்ள கோவையில், கொங்கு சோழர் காலத்தில் நொய்யல் ஆற்றைச் சுற்றி ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பல்வேறு நீர்நிலைகள் உருவாக்கப்பட்டு, பாசனத்துக்கும், மழைநீர் சேமிப்புக்கும், வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன.இதன் ஒருபகுதியான சுமார் 4 ஏக்கர் பரப்பளவு கொண்ட சோமயம்பாளையம் ஏரி, குப்பைகள், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடுகள் தேங்கியதுடன், கழிவுநீர் கலப்பு மற்றும் போதிய நீர்வரத்துப் பாதைகள் இல்லாததால் ஏரியின் பயன்பாடு குறைந்தது.

இந்நிலையில் ஏரியை மீட்டெடுக்கும் வகையில்,வாட்டர்டெக் இந்தியா நிறுவனத்தின் நிதி ஆதரவுடன், கம்யூனிட்ரீ அமைப்புஉள்ளூர்பொதுமக்கள் பங்களிப்புடன் ஏரியை புனரமைக்கும் பணிகள் கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்டு. ஏரியில் தேங்கியிருந்த குப்பைகள் மற்றும் கழிவுகள் அகற்றப்பட்டு, நீர்வரத்துமற்றும்நீரோட்டப் பாதைகள் சீரமைக்கப்பட்டதன் மூலம் நீண்ட காலமாக பயன்படாமல் இருந்த சோமயம்பாளையம் ஏரி தற்போது நீரை சேமித்து வைக்கும்வகையில்மீண்டும் தயார்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வரும் வகையில் ஏரியை கோவை மாவட்ட உதவி ஆட்சியர் துஷார் சிங் திறந்து வைத்தார். சோமயம்பாளையம் ஏரியின் புனரமைப்பு மூலம் உள்ளூர் நீர் சேமிப்பு வலுப்படுத்தப்படுவதுடன், கோவையின் பாரம்பரிய நீர் மேலாண்மை முறையை அடுத்த தலைமுறையினருடன் இணைக்கும் முயற்சியாகவும் அமைந்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்நிகழ்வில் வாட்டர்டெக் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயல் அதிகாரியுமான சலில் நாகேஷ் தலால், தலைமைமனிதவளஅதிகாரி லியோனல் பால் டேவிட், கம்யூனிட்ரீ அமைப்பின் நிறுவனர் ஹபீஸ் கான், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணை இயக்குநர் சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், வ.உ.சி விளையாட்டு அரங்கத்தில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள்2026ல் பங்கேற்று வெற்றி பெற்ற விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (30.09.2026) பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாவட்ட விளையாட்டு அலுவலர் திவ்ய நாகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், வ.உ.சி விளையாட்டு அரங்கத்தில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள்2026ல் பங்கேற்று வெற்றி பெற்ற விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (30.09.2026) பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாவட்ட விளையாட்டு அலுவலர் திவ்ய நாகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.



தேசிய தன்னார்வ இரத்ததான தினத்தை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலககூட்டரங்கில்இரத்ததானமுகாம்களைசிறப்பாகநடத்தியதன்னார்வஇரத்ததான முகாம் ஏற்பாட்டாளர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி நேற்று (01.10.2026) வழங்கினார்.



தேசிய தன்னார்வ இரத்ததான தினத்தை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாட்டில் உறுப்புதானம் வழங்கியதில் முதலிடத்தை பெற்றதற்காகவும், உறுப்புதான நோயாளிகளை அடையாளம் காணுவதில் முதலாவதாக வந்தமைக்காகவும் பெருந்துறை, அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (01.10.2026) கேடயத்தினை வழங்கினார்.



தேசிய தன்னார்வ இரத்ததான தினத்தை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலககூட்டரங்கில்இரத்ததானமுகாம்களைசிறப்பாகநடத்தியதன்னார்வஇரத்ததான முகாம் ஏற்பாட்டாளர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று தலைமையில் (01.10.2026) நடைபெற்றது.

# டெட் சிறப்பு தகுதித்தேர்வு முடிவுகளை வெளியிட அனுமதி: சென்னை ஐகோர்ட்டு உத்தரவு



அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளிதலைமைஆசிரியர்களுக்கும்,கடந்த ஜூலை மாதம் சிறப்பு தகுதித் தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தியது. தங்களின் ஒவ்வொரு ஆண்டு அனுபவத்துக்கும் ஒரு கருணை மதிப்பெண் வழங்கும்படி ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு உத்தரவிடக்கோரி தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பி. நடராஜன், என்.செல்வன் உள்ளிட்ட பலர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நீதிபதி பி.டி.ஆஷா முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது, பொதுப்பிரிவு ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வில் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்களை குறைப்பது தொடர்பாக தமிழ்நாடு அரசு கொள்கை முடிவு எடுக்கவுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, ஆசியர்களுக்கு நடத்தப்பட்ட சிறப்பு தகுதித்தேர்வுக்கான முடிவுகளை வெளியிட இடைக்கால தடை விதிக்கிறேன் என்று உத்தரவிட்டார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலத்தில் நேற்று இரவு பெய்த மழையால் சின்னசேலம் சேலம் மெயின் ரோட்டில் ஆங்காங்கே குளம் போல் தேங்கி நிற்கும் நீரால் போக்குவரத்துநெரிசல்ஏற்படுகிறதுஅதுமட்டுமல்லாமல் தேங்கி நிற்கும் தண்ணீரில் கொசுக்கள் இருப்பதால் கொசுவினால் டெங்கு போன்ற காய்ச்சல் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதால் தண்ணீரை நெடுஞ்சாலைத் துறையினரும் சின்னசேலம் பேரூராட்சி நிர்வாகம் தேங்கி நிக்காதவாறுஅந்தத்தண்ணீர்செல்வதற்குவழிஏற்படுத்தி தருமா என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



மத்திய அரசின் கிராமப்புற அமைச்சக வழிகாட்டுதலின் படி கனராவங்கிகிராமப்புற சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிலையம் நடத்தும் காளான் வளர்ப்பு பயிற்சி வருகிற 05.10.2026 முதல் 15.10.2026 வரை 10 நாட்கள் கனராவங்கி ஊரக சுயவேலை-வாய்ப்பு பயிற்சி நிலையம் அரசு பொறியியல் கல்லூரி(IRTT) சாலை, வாசவி கல்லூாரி அருகில், சித்தோடு-ல்நடைபெறஉள்ளது.ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் நூறு நாள் வேலைத் திட்டத்தில் இருப்பவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் இசுய உதவி குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.பயிற்சி பெறதமிழில் எழுத,படிக்கதெரிந்திருக்க வேண்டும். வயது வரம்பு 18 முதல் 50 வயது வரை. பயிற்சி தினந்தோறும் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை (ஞாயிறு தவிர) நடைபெறும், பயிற்சிக்கு கட்டணம் எதுவும் இல்லை. மேலும் தங்கும் விடுதி,உணவு,சீருடை மற்றும் பயிற்சி உபகரணங்கள் இலவசமாகவழங்கப்படும்.பயிற்சிபெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.மேலும் விவரங்களுக்கு

பயிற்சி நிலைய தொலைபேசி எண்கள் : 0424 2400338, 8778323213, 7200650604, 9489043925 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# Delhi's toxic air plan: Do higher parking fees work?



*One of the measures the Delhi government announced this week for the upcoming winter pollution season is to double parking rates. However, past experience shows that the move has not been effective in areas under the New Delhi Municipal Council (NDMC), while the Municipal Corporation of Delhi (MCD), which manages more than 96% of the city's geographical area, has failed to implement it consistently.*

*Enforcing higher rates in MCD areas requires approval from the civic body's elected council, which has routinely blocked the proposal. The last time parking fees were raised in MCD areas to combat seasonal smog was in November 2017, when charges were quadrupled under the Graded Response Action Plan (GRAP).*

*That decision was rolled back after it triggered chaos on the streets. Unwilling to pay the higher fees, drivers abandoned authorised lots to park illegally along the roads.*

*In its order reversing the 2017 decision, the erstwhile South Delhi Municipal Corporation (SDMC) recorded that "chaotic traffic conditions had occurred and traffic jams were reported from many areas, though a considerable portion of the authorised parking areas remained vacant" after the parking tariff was raised.*

*A senior municipal official involved in parking management said councillors never signed of on the proposal again.*

*"We cannot directly increase the parking fee. There are contractual obligations with private parking contractors. This measure was also a part of the Graded Response Action Plan (GRAP) during higher stages of GRAP. We need sanction from the councillors to increase the parking fee," the official said.*

*He added that officials had tried over the last several years to raise parking charges to discourage people from using their vehicles during the peak pollution season, but hadn't received the approval.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.